**ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 06.**

**பத்திரிகை செய்தி**

ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை எண்.03/2025, நாள் 11.08.2025- ன்படி 2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் I மற்றும் தாள் II ஆகியவற்றுக்கான தேர்வு எதிர்வரும் 15.11.2025 மற்றும் 16.11.2025 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

விண்ணப்பித்த தேர்வர்களுக்கு நுழைவுச் சீட்டு (Hall Ticket) ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் இன்று 03.11.2025 பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, தேர்வர்கள் அவர்களது User id மற்றும் கடவுச் சொல் (Password) ஆகியவற்றை உள்ளீடு செய்து தங்களுக்குரிய நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நுழைவுச் சீட்டு பதிவிறக்கம் செய்ய இயலாதவர்களுக்காக ஆசிரியர் தேர்வு வாரியத்தில் TNTET – 2025 சிறப்பு முகாமானது 04.11.2025 முதல் 10.11.2025 வரை (வேலை நாட்களில்) செயல்படும். நுழைவுச் சீட்டு பதிவிறக்கம் செய்வதிலோ அல்லது வேறு ஏதேனும் குறைகள் இருந்தாலோ இச்சிறப்பு முகாம் அலுவலர்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தில் நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்

நாள்: 03.11.2025